**C.C. 63 of 2012** **Previous Date : 16.11.2017**

**PW1**

**காளிசாமி த/பெ.கருப்பணகவுண்டர்**

**14.11.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.11.2025.**

**A1 present. A2 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. என்னுடைய பெயர் காளிசாமி(எ)சின்னதுரை என்றால் சரியல்ல, காளிசாமி தான் என்னுடைய பெயர். என் மீது திண்டுக்கல் PCR நீதிமன்றத்தில் Special SC 1/2023 என்ற வழக்கில் நான் 3ம் எதிரியாகவும், எனது மகன் நாட்டுத்துரை 4வது எதிரியாகவும் இருக்கும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல, அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் Ex.P1 புகார் மனு தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு தான் என்றால் சரிதான். Ex.P1 புகார் மனு 21.07.2009ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.P1 புகார் மனுவில் சம்பவம் நடந்த நாள் 20.07.2009 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். Ex.P1 புகாரை யார் எழுதினார் என்றால் காவல் நிலையத்தில் ஏட்டையா எழுதினார். அந்த ஏட்டையா பெயர் என்ன என்றால் தெரியவில்லை. எனது ஊரில் இருந்து ஆயக்குடி காவல் நிலையம் அப்போது எவ்வளவு தூரம் என்றால் ஒன்றரை கி.மீ. சம்பவ காலத்தில் ஆயக்குடி காவல் நிலையம் ஆயக்குடி கொய்யா மார்கெட்டிற்கு எதிராக இருந்தது என்றால் சரிதான். TKN புதூரில் இருந்து எங்கு வந்தாலும் ஆயக்குடி காவல் நிலையம் வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான். Ex.P1 புகாரை யார் தட்டச்சு செய்தார் என்றால் வழக்கறிஞர் தட்டச்சு செய்து கொடுத்தார். எந்த ஊரில் வைத்து தட்டச்சு செய்தார் என்றால் பழைய ஆயக்குடியில் வைத்து தட்டச்சு செய்தார். எந்த தேதியில் Ex.P1 புகார் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் 21.07.2009ம் தேதி. எனது வழக்கறிஞர் எந்த ஊரில் அலுவலகம் வைத்திருந்தார் என்றால் பழனியில் வைத்திருந்தார். நான் பழனியில் இருந்து எனது வழக்கறிஞரை அழைத்து சென்றேனா என்றால் இல்லை, நான் காவல் நிலையம் சென்றேன். பழனி வருவதற்கு நான் எனது ஊரில் இருந்து நான் ஆயக்குடி காவல் நிலையம் தாண்டி தான் பழனி வந்தேனா என்றால் பழனி வராமல் பழைய ஆயக்குடியில் வந்து Type செய்யப்பட்டது, எனது வழக்கறிஞர் சொல்லி**

தான் இந்த விபரங்கள் type செய்யப்பட்டதா என்றால் நான் சொல்லி தான் type செய்யப்பட்டது.

2. எனக்கும், எதிரிகள் தரப்பிற்கும் OS.No.94/2009 என்ற வழக்கு கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றால் அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது, அதில் எதிர்தரப்பு மேல்முறையீடு செய்திருக்கிறார்கள். மேற்படி OS.No.94/2009 வழக்கை 1ம் எதிரி ராமசாமி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த சிவில் வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியும். எனக்கும், ராமசாமிக்கும் நிலம் சம்மந்தமாக வரப்பு தகராறு இருந்தது என்றால் சரிதான். வழக்கறிஞர் கமிஷனர் 01.07.2009ம் தேதி அளந்தாரா என்றால் உரிமையியல் பிரச்சனையை விட்டுவிடுங்கள், குற்றவியல் பிரச்சனையை கேளுங்கள். வழக்கறிஞர் கமிஷனர் 18.07.2009ம் தேதி அளந்தாரா என்றால் உரிமையியல் பிரச்சனையை விட்டுவிடுங்கள், குற்றவியல் பிரச்சனையை கேளுங்கள். நீதிமன்ற ஆணையர் பார்த்த பிறகு மூன்று நாள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் நான் புகார் கொடுத்தது நீதிமன்ற ஆணையர் சம்மந்தமாக அல்ல. ராமசாமி 19.06.2009ம் தேதி புகார் கொடுத்து மனு ஏற்பு ரசீது வாங்கி வைத்துள்ளார் என்றால் எனக்கும், அதற்கும் பிரச்சனை இல்லை. புகார் ஏற்பு மனு சான்று Ex.P2 ஆனது 22.07.2009ம் தேதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் 22.07.2009ம் தேதி புகார் கொடுத்ததால் தான் எனக்கு 22.07.2009 புகார் மனு ரசீது வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார் மனு ரசீது வழங்கிய காவல் அதிகாரியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் 1ம் எதிரி புகார் விசாரணைக்கு வரவில்லை. நான் எதிரிகள் மரத்தை வெட்டியதாக புகார் கொடுத்ததில் என்ன மரம் என்றால் 8 வேப்ப மரம், 2 ஊஞ்சல் மரம். அந்த மரங்கள் இருந்த நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் 44/1A, 44/1B, 44/1C ஆகும். சர்வே எண் 44/1A, 44/1B, 44/1C–ன் உரிமையாளர் 1ம் எதிரி ராமசாமி என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண் நிலத்திற்கான உரிமையாளர் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நானும், எனது அண்ணனும் வழக்கு நடந்த சமயத்தில் அந்த சர்வே எண்ணில் கட்டிடம் கட்டி கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல, முன்பு கட்டிவிட்டோம். எங்களுக்கெதிராக 1ம் எதிரி ராமசாமி மேற்படி உரிமையியல் வழக்கில் இடைநிலை தடை ஆணை வாங்கினார் என்றால்

எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. 1ம் எதிரி தடை ஆணை வாங்கியதால் கட்டிடம் கட்ட முடியாமல் போனதால் நான் எதிரிகள் மீது பொய்யான இந்த புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. மரம் வெட்டியதாக சொல்லும் புகைப்படத்தையோ அல்லது மரம் இருக்கும் அடங்கலையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். எந்த வரிசை எண்ணில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் உரிமையியல் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன், இங்கு புகார் கொடுத்துள்ளேன். 20.07.2009ம் தேதி மிரட்டியதாக புகார் கொடுத்துள்ளதில் உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் நான் அன்றைக்கே புகார் கொடுத்திருப்பேன் என்றால் நான் அன்று மாலை 5.30 மணிக்கு போய்விட்டேன், புகார் கொடுத்தேன். நான் சொல்வது போல் புகார் கொடுக்காமல் பின்னிட்டு இரண்டு நாள் கழித்து எதிரிகளை மிரட்ட வேண்டும் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரச்சனைக்குரிய நிலத்தில் தான் குடியிருக்கிறேனா என்றால் இல்லை, என் நிலத்தில் தான் குடியிருக்கிறேன். நான் என்ன வகை வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சீமையோடு, சிமெண்ட் சீட் வீட்டில் குடியிருக்கிறேன். அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் ஆமாம். மின் இணைப்பு எண் என்ன என்றால் EB Office ல் உள்ளது. நான் மின் இணைப்பு வாங்காமல் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி தாக்கல் செய்த உரிமையியல் வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்றும், இடைநிலை தடை ஆணையை திரும்ப பெற வேண்டும் என்றும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வேறு வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை. உண்மையில் சம்பவம் நடந்தது உண்மையாக இருந்தால் அன்றைக்கே புகார் கொடுத்து காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருப்பார் என்பதால் அதற்கு பிறகு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, காவல் நிலையம் விசாரணைக்கு எதிரிகள் தரப்பு வரவில்லை என்பதால் இங்கு புகார் தாக்கல் செய்தேன். நான் Ex.P1, Ex.P2ல் நடவடிக்கை எடுக்கவில்லை என்று உயர் அதிகாரிக்கு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் மீது நிறைய வழக்குகள் இருப்பதால் நீதிமன்ற நடவடிக்கை தெரியும் என்பதால் எதிரிகள் மீது பொய்யான இந்த புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.3 எனது தம்பி என்றால் எனது அண்ணன். ம.சா.2 குப்புசாமி எனது மச்சினன் என்றால் சரிதான். உண்மையில்

சம்பவம் நடந்திருந்தால் வேறு பொதுமக்கள் சாட்சியம் அளித்திருப்பார்கள் என்றாலும், அதனால் தான் எனது குடும்ப உறுப்பினர்கள் சாட்சிகளாக இருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல, அப்போது அவர்கள் தான் தோட்டத்தில் இருந்தார்கள். எதிரிகளின் நிலம் எனது இடத்திற்கு அருகில் இருக்கிறது என்றால் தெற்கு பக்கமும், வடக்கு பக்கமும் இருக்கிறது. இந்த புகாரை முழுக்க முழுக்க ஜோடித்து எதிரிகள் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தீர்ப்பாகிவிட்டது, அதற்கு பிறகு அந்த வழக்கு நடந்து வருகிறது. எதிரிகள் நான் சொல்வது போல் 15 பேர் அழைத்து வந்து மரம் வெட்டவில்லை என்றாலும் அவர்கள் அவர்களின் நிலத்தில் தான் இருந்தார்கள் என்றாலும் சரியல்ல. 1ம் எதிரியையும், அவரது வயதான மாமனாரான 2ம் எதிரியை மிரட்ட வேண்டும் என்றும், நிலத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.14 18:14:39 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**C.C. 63 of 2012** **Previous Date : 16.11.2017**

**PW2**

**குப்புசாமி த/பெ.நாச்சிமுத்து**

**14.11.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.11.2025.**

**A1 present. A2 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. எனது ஊர் எந்த ஊர் என்றால் TKN புதூர். ம.சா.1 காளிசாமி எனக்கு என்ன உறவு என்றால் எனது அக்கா கணவர். ம.சா.1ன் பெயர் காளிசாமி(எ)சின்னதுரை என்றால் சரியல்ல, காளிசாமி. காளிசாமியும், நானும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது வீடு எங்குள்ளது என்றால் தோப்பில் உள்ளது. காளிசாமி வீடு எங்குள்ளது என்றால் எனக்கு பக்கத்தில் உள்ளது. காளிசாமி காவல் நிலையம் செல்லும் போது நான் சென்றேனா என்றால் இல்லை. புகார்தாரர் எனது அக்கா கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எனது அக்கா கணவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.11.14 18:14:45 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**C.C. 63 of 2012** **Previous Date : 16.11.2017**

**PW3**

**கருப்புசாமி த/பெ.கருப்பணகவுண்டர்**

**14.11.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.11.2025.**

**A1 present. A2 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் பெயர் என்ன என்றால் கருப்புசாமி. நான் புகார்தாரர் காளிசாமியின் அண்ணன் என்றால் சரிதான். காளிசாமியுடன் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க நான் சென்றேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளுக்கு மூன்று நாள் கழித்து காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் ஒன்றரை கி.மீ. இருக்கும் என்றால் 3 கி.மீ. இருக்கும். எங்களுக்கும், 1ம் எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக உரிமையியல் பிரச்சனை நடந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், எனது தம்பி காளிசாமியும் ஒன்றாக தான் குடியிருக்கிறோமா என்றால் நான் தெற்கு பக்கத்தில் இருக்கிறேன், எனது தம்பி வடக்கு பக்கத்தில் இருக்கிறார். எனது வீட்டிற்கும், எனது தம்பி காளிசாமி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கி.மீ. இருக்கும். நான் குடியிருக்கும் வீட்டில் எவ்வளவு ஆண்டுகளாக குடியிருக்கிறேன் என்றால் 40 வருடம் குடியிருக்கிறேன். எனது தம்பி காளிசாமி எங்கிருக்கிறார் என்றால் அங்கு தோட்டத்தில் தான் இருக்கிறார். எனது தம்பி புதியதாக வீடு கட்டி எவ்வளவு நாள் இருக்கம் என்றால் சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். எனது தம்பி வீடு கட்டியிருக்கும் நிலத்திற்கு அருகில் 1ம் எதிரி ராமசாமி நிலம் இருக்கிறது என்றால் சரிதான். எனது தம்பி குடியிருக்கும் வீடு பூர்விக நிலமா, கிரயம் வாங்கிய நிலமா என்றால் கிரயம் வாங்கிய நிலம். எனது தம்பி கிரயம் வாங்கியது எத்தனை ஏக்கர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தம்பி வீடு கட்டும்போது தான் பிரச்சனை நடந்ததாக சொல்கிறார் என்றால் சரிதான். இந்த நிலம் சம்மந்தமாக 1ம் எதிரி ராமசாமி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து இடைநிலை தடை ஆணை வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. பிரச்சனை நடந்ததாக சொல்லும் தேதியில் நான் எனது தோட்டத்தில் இருந்தேன் என்றால்

சரிதான். புகார்தாரர் எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தம்பி காளிசாமி சொல்வதுபோல் எதிரிகள் வந்து மரம் எதுவும் வெட்டவில்லை என்றாலும், உரிமையியல் வழக்கு இருப்பதால் பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் எனது தம்பி காளிசாமி அன்றையே தேதியில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் நாங்கள் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.14 18:14:52 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.